**14.12.2022**

**OS.No. 33/2014 PW : 1, திரு. ஸ்ரீதரன்**

**1ஆம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை...**

பாகப்பிரிவினை பரிகாரம் கோரி என் சகோதரர்கள் மீது இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். 'ஏ' முதல் 'எப்' அட்டவனை சொத்துக்களை பிராதில் காட்டியுள்ளேன். தாவா சொத்துக்களின் சர்வே எண்கள் தெரியுமா என்று கேட்டால் நிறைய சர்வே எண்கள் இருக்கிறது. ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்துக்கள் என் தந்தையின் சுயசம்பாத்திய சொத்துக்கள். நான் டி.ஆர்.ஓ.வாக வேலை செய்து ஓய்வு பெற்றுவிட்டேன். என் தந்தை உயிருடன் இருக்கும்வரை நாங்கள் கூட்டுகுடும்பமாக இருந்தோம். எங்களுக்கு திருமணமான பின்பும் என் தந்தை உயிருடன் இருக்கும்வரை நாங்கள் கூட்டுகுடும்பமாக இருந்தோம். நான் என்னுடைய உத்தியோகத்தின் காரணமாக தனியாக குடியிருந்தேன். நானும், 1, 2 பிரதிவாதிகளும் எப்போதும் கூட்டுகுடும்பமாக குடியிருக்கவில்லை என்றால் சரியல்ல. எங்களுக்குள் போக்குவரத்து இருந்தது. 'இ' அட்டவனை சொத்தில் உள்ள 10, 20 முதல் 26 வரையுள்ள அயிட்ட சொத்துக்கள் மட்டுமே கூட்டுகுடும்ப சொத்துக்கள் என்று சொன்னால் சரியல்ல. அது 1ஆம் பிரதிவாதியின் எதிர்வாதமாகும். 1ஆம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள கூடுதல் எதிர்வழக்குரையை பற்றி எனக்கு தெரியும். அதில் உள்ள விவரங்கள் தவறானது. 'ஏ' அட்டவனையின் 1 முதல் 7 மற்றும் 13 முதல் 19 வரையிலான இன சொத்துக்கள் 1ஆம் பிரதிவாதியின் தனி சொத்துக்கள் என்றால் சரியல்ல. சர்வே எண் 473/4ல் உள்ள சொத்தும் 1ஆம்

பிரதிவாதியின் தனிப்பட்ட சொத்து என்று சொன்னால் சரியல்ல. அது எங்களுடைய குடும்ப சொத்து இல்லை. அது எங்களுடைய அனுபவித்திலும் இல்லை. மேற்கூறிய அயிட்ட சொத்துக்கள் என் தந்தை 1ஆம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்திருக்கிறார் என்று சொன்னால் என் தந்தை ஒரு செட்டில்மெண்ட் ஆவணத்தை எழுதி கொடுத்துள்ளார். அது சம்பந்தமாக ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது. அந்த சொத்துக்களின் 5 ஏக்கர் 15 சென்ட் ஆகும். அது 26.09.1994 தேதியிட்ட பதிவு செட்டில்மெண்ட் ஆவணமாகும். என் தந்தையை வர்ப்புறுத்தி அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை 24.05.1995ல் ரத்து செய்ய வைத்தேன் என்று சொன்னால் சரியல்ல. என் தந்தை தன்னிச்சையாக அந்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்யவில்லை என்றால் சரியல்ல. 26.09.1994 தேதியிட்ட செட்டில்மெண்ட் ஆவணத்தின் நகல் என்னிடம் காட்டப்படுவது தான். அது **பி.வா.சா.ஆ.1** ஆகும். என் தந்தை எழுதிவைத்த 24.05.1995 செட்டில்மெண்ட் ரத்து ஆவணத்தின் நகல் என்னிடம் காட்டப்படுவது தான். அது **பி.வா.சா.ஆ.2** ஆகும். என் தந்தை அந்த ஆவணங்களை எழுதி வைத்த போது அவருக்கு 85 வயது இருக்குமா என்று எனக்கு ஞாபகமில்லை. என் தந்தையை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு நான் தான் அழைத்து சென்றேன் என்றால் நான் அழைத்து செல்லவில்லை. 5.15 ஏக்கருக்கு 1ஆம் பிரதிவாதி பெயரில் ஒரு பட்டா கொடுத்திருந்தார்கள். அவ்விதம் பட்டா மாறியது தெரிந்தவுடன் நானும், என் மற்ற 3 சகோதரர்களும் அந்த பட்டாவை ரத்துசெய்ய மேல்முறையீடு செய்தோம்.

நான் தான் என் சகோதரர்களை மேல்முறையீடு செய்ய தூண்டிவிட்டேன் என்றால் சரியல்ல. என்னுடைய மற்ற சகோதரர்கள் தனித்தனியாக வழக்கறிஞர் வைத்து எதிர்வாதம் செய்துவருகிறார்கள். 1ஆம் பிரதிவாதி பெயரில் இருந்த பட்டாவை ரத்து செய்தபோது நான் எந்த ஊரில் வேலை பார்த்தேன் என்று கேட்டால் நான் பணிஓய்வு பெற்றுவிட்டேன். நான் கடைசியாக சென்னையில் வேலை பார்த்து ஓய்வு பெற்றேன். நான் என் செல்வாக்கை பயன்படுத்தி பட்டாவை ரத்துசெய்ய வைத்தேன் என்றால் சரியல்ல. அதை எதிர்த்து 1ஆம் பிரதிவாதி 181/2002 என்ற வழக்கை தாக்கல் செய்தாரா என்று கேட்டால் அவரின் வழக்கறிஞர் எனக்கு அறிவிப்பை அனுப்பிய பிறகு தான் அந்த வழக்குபற்றி தெரிந்துகொண்டேன். என்னை தரப்பினராக சேர்க்ககோரி அவ்வழக்கில் மனு செய்தேன். மாவட்ட வருவாய் அலுவலரிடம் மேல்முறையீடு தான் செய்யவேண்டும் என்று அவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. அதை எதிர்த்து இவ்வழக்கின் 1ஆம் பிரதிவாதி தாக்கல் செய்த ஏ.ஸ்.31/2005 என்ற மேல்முறையீடு தள்ளுபடி செய்யப்பட்டது. அதன் பின்னர் 1ஆம் பிரதிவாதி மாவட்ட வருவாய் அலுவலரிடம் ஒரு சீராய்வுமனுவை தாக்கல் செய்தார். 1ஆம் பிரதிவாதி உரிமையியல் நீதிமன்றத்தை அணுகிகொள்ளவேண்டும் என்று சீராய்வுமனுவை தள்ளுபடி செய்துவிட்டார். அதன்பின்னர் 1ஆம் பிரதிவாதி அ.வ.எண்102/2016 என்ற வழக்கை தாக்கல் செய்து அது கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம் திருவள்ளூரில் நிலுவையில் உள்ளது. 24.05.1995 தேதியிட்ட செட்டிண்மெண்ட்

ரத்துஆவணம் செல்லாது என்று 1ஆம் பிரதிவாதி பரிகாரம் கோரியுள்ளார். அவ்வழக்கில் 1ஆம் பிரதிவாதி வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். அவரை குறுக்கு விசாரணை செய்துவிட்டோம். அது பாதியில் நின்றுவிட்டது. கடைசி பக்கத்தில் தேதி தவறுதலாக இருந்ததால் ஆவணங்களை வரவழைக்க கோரி நிலுவையில் உள்ளது. செட்டில்மெண்ட் ரத்து ஆவணத்தில் எங்களுடைய தாய்மாமாவான பி.எஸ்.ராஜாராம் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார். பிவாசாஆ2ல் 5வது பக்கத்தில் பி.ஜி. ராஜேந்திரன் என்று போடப்பட்டுள்ளது. சார்பதிவாளர் கொடுத்த நகலில் தவறுதலாக எழுதியிருக்கிறார்கள். அந்த தவறு எப்போது தெரியும் என்று கேட்டால் இப்போது தான் தெரியும். எனக்கு கொடுத்த நகலில் ராஜாராம் நாயுடு என்று தான் இருக்கிறது. அந்த சாட்சி எனக்கு வேண்டப்பட்டவரா என்று கேட்டால் என்னுடைய மற்றும் பிரதிவாதிகளின் தாய்மாமா ஆவார். ராஜாராம் என்பவர் சாட்சி கையொப்பம் போடவில்லை என்றும் ராஜேந்திரன் என்பவர் தான் சாட்சி கையொப்பம் போட்டுள்ளார் என்றால் சரியல்ல. அந்த ராஜேந்திரன் சென்னை, அய்யாவு தெரு, ஷெனாய் நகரில் குடியிருக்கிறாரா என்று கேட்டால் அது ராஜாராம் என்பவரது முகவரியாகும். ரத்து பத்திரம் பேரம்பாக்கம் சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது. சாட்சியை நான் சென்னையிலிருந்து அழைத்து வந்தேன் என்றால் சரியல்ல. ரத்து ஆவணத்திற்கு உரிய முத்திரைதாளை வில்லிவாக்கத்தில் நான் தான் வாங்கினேன் என்றால் சரியல்ல. சென்னை, அண்ணாநகரில் என் சொந்த வீட்டில் 1984 வருடம்

முதல் குடியிருந்து வருகிறேன். அண்ணாநகரும், ஷெனாய் நகரும் அருகஅருகே இருக்கிறது. அ.வ.எண்.102/2016ஐ நான் தான் தீவிரமாக எதிர்வாதம் செய்து வருகிறேன் என்றும் மற்ற பிரதிவாதிகள் சாதாரண தரப்பினர்கள் என்றால் நான் எதிர்வாதம் செய்து வருகிறேன். மற்ற பிரதிவாதிகளுக்கு அவ்வழக்கில் எதிர்வாதம் செய்ய விருப்பம் இல்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. மற்ற பிரதிவாதிகள் அவ்வழக்கில் தோன்றா தரப்பினர்களாக இருக்கிறார்களா என்று எனக்கு தெரியாது. 1ஆம் பிரதிவாதியின் பெயரில் உள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தில் உள்ள சொத்தை தவிர்த்துவிட்டு தான் நான் இவ்வழக்கை தாக்கல் செய்திருக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 1ஆம் பிரதிவாதி கூடுதல் எதிர்வழக்குரையில் சொல்லியுள்ள சர்வே எண்கள் 219/3, 220, 221, 222 உள்ளிட்ட பல்வேறு சர்வேஎண்களில் உள்ள சொத்தை 2.94 ஏக்கராக நானும், 2, 3 பிரதிவாதிகளும், கிருஷ்ணமூர்த்தியும் கிரையம் வாங்கினோம். என்னிடம் காட்டப்படும் 31.01.2001 தேதியிட்ட கிரைய ஆவணம் மூலம் கிரையம் வாங்கினோம். அது **பி.வா.சா.ஆ.3** ஆகும். அந்த சொத்துக்களை நான் இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்று சொன்னால் அது என் தனிப்பட்ட சொத்துக்களாகும். அந்த சொத்துக்கள் மற்ற பிரதிவாதிகள் பெயரிலும் இருப்பதால் அந்த சொத்துக்களை சேர்க்கவேண்டும் என்றும் அதை சேர்க்காததால் இவ்வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

Sd/- S. Ganapathisamy,
I Additional District and Sessions Judge,
Tiruvallur.